# மணிதீபம்



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்துரை பூமணி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவேடு

05.05.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி வடக்கு கைதடியைப் பிறப்பிடமாகவும்

பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்துரை பூமணி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவேடு

## 05-05-2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின்
தலைவியாக விளங்கி
உமது உடலை மெழுகாக்கி
உயிரை திரியாக்கி
உதிரத்தை எண்ணையாக்கி
இறுதிவரை எமக்காய் உருகி
எம் மனதில் நீக்கமற நிறைந்திட்ட
எம் ஆருயிர் அன்னையே
மாண்புமிகு மாமியே
பாசமிகு பேத்தியே
உங்கள் பாதக் கமலங்களில்
இம்மலரினைச் சமர்ப்பணம்
செய்கின்றோம்.

**இங்ஙனம்**
***குடும்பத்தினர்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'



**தோற்றம்**
**10-10-1943**

**மறைவு**
**05-04-2017**

அமரர்

# சின்னத்துரை பூமணி


## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு துர்முகிதனில் ஆனதொரு பங்குனியில்
பூண்ட வளர்பிறை நவமியிலே - நீண்டபுகழ்
தேடும் நற்பூமணியாள் சிவகுருநாதன் அடி
கூடும் தினமெனவே கூறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'



# அமரர் குருநாதர் சின்னத்துரை

(முன்னாள் கிராம சேவை அலுவலர் - தென்மராட்சி)

**மண்ணில்** 24-11-1933

**விண்ணில்** 12-01-1984

திதி : மார்கழி மாத பூர்வபக்க நவமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரத்திரட்டு

திருச்சிற்றம்பலம்

## காப்புச் செய்யுள்

திருவாக்குங் செய்கருமங் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்குமுருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண் ணைத்தென் பால் வெண்ணெய்நல்லூர் அருள்துறையுள்
அத்தா உனக்காளாய் இனிஅல்லேன் எனலாமே!

### திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்டி
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூறாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேத்தரத்தானே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்ற(ம்) முற்றும்
எமக்கமுதானம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிதாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகவென உரைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்துமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவது கண்டுமின்று மிந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம்பலவர்
அடி சார்ந்த நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்கி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்
நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும்
நிமலனருள் கந்த சஷ்டி கவசம் தனை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்கு குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிங்கிணி ஆட
மையல் நடம் செய்யும் மயில்வாகனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலால் எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலன் நித்தம் வருக
சிரகிரி வேலன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளிரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செய் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையம்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செம்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டு கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடிணினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனம் ஒருவழிப் போக்கம்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தனலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் கழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனது உள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தஷஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்துத் திங்கள் எம்மைக் கருவினில் சுமந்து பெற்றெடுத்து ஆளாக்கி இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தின் திருத்தாள் சேர்ந்த

# எம் தெய்வமாம் அன்னையின் வாழ்க்கை நீரோட்டம்

எங்கள் உயிர்மூச்சாம் இனிய தாயாரின் கதையை எங்கே தொடங்கி எப்படிச் சொல்லி முடிப்போம்? ஓரிரண்டு நாட்களில் முடிந்திட்ட ஒரு சில வரிகளினுள் அடங்கிடும் சிறுகதையா எம் தாயின் கதை. நீளும் எம் மனவெளியில் விரியும் எம் தாயின் அன்பு அலைகளின் போர்வைக்குள் இதமான அர்த்தங்கள் கண்ட எம் உயிர் அனுபவங்களை எழுதி முடித்திட இப்பிறவியில் முடிந்திடுமா? இல்லை... இல்லை... எனினும் நீங்கள் எம்முடன் வாழ்ந்த காலங்களில் பகிர்ந்து கொண்ட மலரும் நினைவுகளுடன் சில துளி நேரம்...

இந்துமா சமுத்திரத்தின் "சிவபூமி" எனப் போற்றிடும் புண்ணியப் பதியே ஈழமணித் திருநாடாகும். இங்கு சைவப் பண்பாடும், செந்தமிழும் தழைத்தோங்கும் நகரங்களின் சிரமெனத் திகழும் யாழ் பாடி ஊராம் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சி பிரிவிலே கைதடி வடக்கு எனும் கிராமத்தில் இராமலிங்கம் (முன்னாள் புகையிரத திணைக்கள அலுவலர்) மாணிக்கம் தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வியாக 1943ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதி மலர்ந்தவர் தான் எம் அன்புத் தாய் பூமணி அவர்கள். இவருக்கு கூடப்பிறந்த ஒரே ஒரு அண்ணன் புவனேஸ்வரன்.

எமது தாயார் பள்ளிப்பராய வயதில் தனது ஆரம்பக் கல்வியை யா/கைதடி வடக்கு குருசாமி வித்தியாலயத்திலும் பின்னர் கைதடி மேற்கு யா/ முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும் தொடர்ந்தார். பாடசாலையில் கல்வி கற்கும் வேளையில் கல்விச் செயற்பாட்டுடன் மட்டும் நின்றிடாது சங்கீதம், தையல், விளையாட்டு போன்ற இணைபாடவிதானச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கினார். இவருக்குப் பிடித்த விளையாட்டுக்களில் கயிறடித்தல், தேசிக்காய் ஓட்டம், ஓட்டம் என்பன முதன்மையானவை.

எமது தாயார் திருமணப் பராயம் எய்தியவேளை 1960ம் ஆண்டு உறவினரான எமது தந்தை குருநாதர் சின்னத்துரை அவர்களைக் கரம் பற்றினார். அக்காலத்தில் எமது தந்தை பொலிஸ் இலாகாவில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றினார். பின்னர் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிவரும் காலத்தில் எமது பெற்றோர் உறுப்பிட்டி எனும் இடத்தில் வாழ்ந்து வந்தனர். அதன் பின்னர் எமது தந்தை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக மந்துவில், நுணாவில், நாவற்குழி, கைதடி தெற்கு ஆகிய இடங்களில் கடமையாற்றி மக்களிடம் நன்மதிப்பு பெற்ற ஓர் சிறந்த கிராம அலுவலராக விளங்கினார். அக்கிராம மக்களுடன் எமது தாயார் நல்லன்புடன் பழகி வருவார். எமது தந்தையாரிடம் அம்மக்கள் நல்ல அன்பான, அடக்கமான மனைவி ஐயா உங்களிற்கு என பாராட்டி எமது தாயாரை பூரிப்படையச் செய்தனர். எமது பெற்றோரை ஊர்மக்கள் வடிவேலு அப்பையா, சின்னமாமி என செல்லமாக அழைத்து மகிழ்வர்.

எமது பெற்றோரின் இல்லறப் பேற்றின் அருந்தவப் பயனாக 8 ஆண்டுகளின் பின் சுமதி, சுகந்தினி, கௌரீசன், சிவசுதன், சிவபரன், சிவகரன், சுதர்சினி என ஏழு மழலைகளான எம்மைப் பெற்று இன்புற்றனர். எமக்கு கல்விச் செல்வத்தை சிறந்த முறையில் வழங்கி உயர்கல்வி கற்று அரசாங்க வேலைகளில் கடமையாற்றி ஒவ்வொரு பிள்ளையும் மேன்னிலை பெறவைத்த பெருமை எம் பெற்றோரையே சேரும். நாம் பிறப்பதற்கு முன்பதான அந்த 8 ஆண்டு காலப்பகுதியில் எமது ஒன்றுவிட்ட சகோதரன் பாலசுப்பிரமணியம் (சின்னராசு) என்பவர் எம் பெற்றோருடன் தங்கி வளர்ந்து வந்தார். தற்போது இவர் கொலண்ட் நாட்டில் தனது குடும்பத்தினருடன் மிகவும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஐயகோ என்ன கொடுமை நாம் ஒன்றாய் கூடி வளர்ந்துவரும் வேளை எம் இனிய தேன்கூட்டில் யார் கண்பட்டதோ எதிர்பாராதவிதமாக எமது தந்தை 1984ம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இன்னுயிர் நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முதல் எமது தாயார் எமது அம்மம்மா மாணிக்கம், மாமா புவனேஸ்வரன் ஆகியோருடன் சேர்ந்து வளர்த்து ஆளாக்க பட்ட துன்பம் எண்ணிலடங்காது. அந்த நிலையை இன்று எங்களால் நன்றாக உணரமுடிகின்றது. தந்தையின் துணையின்றி பதினாறு வயது முதல் 3 வயது வரையிலான எம் ஏழ்வரையும் தந்தையின் ஓய்வூதியப் பணத்திலும் தோட்ட வருமானத்திலும் உணவூட்டி, கல்வியறிவூட்டி, யாரிடமும் குறை கேளாது வளர்த்தெடுத்து பிள்ளைகள் நாம் திருமண வயதை அடைந்ததும் எமக்கு இனிய திருமண வாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்தார். எமது அம்மம்மா மாணிக்கமும் 1996 இடப்பெயர்வு காலத்தில் முத்தையன்கட்டு முல்லைத்தீவில் இயற்கை எய்திவிட்டார். எப்படி உரைப்போம் எம் பாசத்தாயின் எமக்கு ஒளி தந்து தன்னை உருக்கிய மெழுகுவர்த்தி வாழ்க்கையை... முடியவே இல்லை எம் தாயைப் பற்றி எடுத்துரைக்கவோ ஜீரணிக்கவோ...

மூத்தமகள் சுமதி(மதி)யான எனக்கு எமது சொந்த இடமான கைதடியைச் சேர்ந்த குமாரசாமி இராசம்மா தம்பதிகளின் புதல்வன் பத்மபாதன் என்பவரை ஜேர்மனில் மணம் முடித்து கொடுத்து மோகனன், நிதர்சனன், தரணிகா எனும் பேரப்பிள்ளைகளையும்

இரண்டாவது மகளான சுகந்தினி (சுகி) எனக்கு எமது பிறந்த இடம் கைதடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவயோகம் தம்பதிகளின் புதல்வன் மதிவண்ணன் என்பவரை நோர்வேயில் மணமுடித்து வைத்து கௌசிகா, பபிஷா, கார்த்திக் எனும் பேரப்பிள்ளைகளையும்

மூன்றாவது மகனான கௌரீசன் (ஈசன்) எனக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சிவபாலசுந்தரம் மங்களகுமாரி தம்பதிகளின் புதல்வி தீபா என்பவரை மணம் முடித்து வைத்து தேனுஹர்சன், டனுசிகன், மனுசிகன் எனும் பேரர்களையும்

ஐந்தாவது மகனான பிரான்சில் வசிக்கும் சிவபரன் (பரன்) எனக்கு தெல்லிப்பழையைச் சேர்ந்த ஸ்ரீரங்கநாதன் இந்திராதேவி தம்பதிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வி சர்மிலா என்பவரை மணம் முடித்து வைத்து வேதிகா, யசிக்கா எனும் பேரப்பிள்ளைகளையும்

ஆறாவது மகனான பிரான்சில் வசிக்கும் சிவகரன் (சிவா) எனக்கு கோப்பாயைச் சேர்ந்த சிவராசா பாக்கியவதி தம்பதிகளின் புதல்வி விஜிதா என்பவரை மணம்முடித்து வைத்து சிஸ்னயா, டிஷிகரன் எனும் பேரப்பிள்ளைகளையும்

கடைக்குட்டி சுதர்சினி (தர்ஷி) எனக்கு பாலமோட்டையைச் சேர்ந்த துரைசிங்கம் புனிதம் தம்பதிகளின் புதல்வன் துரைராஜ் (கரன்) என்பவரை லண்டனில் மணம் முடித்து வைத்து வினோஜ், கஸ்வின், சர்வின் எனும் பேரப்பிள்ளைகளையும் பெற்று மகிழ்ந்தார்.

இதற்கிடையில் பிள்ளைகள் எல்லோரையும் நல்வழிப்படுத்தி தான் பட்ட துயரங்களில் இருந்து எம் இனிய தாய் மீண்டுவரும் வேளை 2007ம் ஆண்டு எம் வாழ்வில் இன்னோர் இடி வீழ்ந்தது. ஆம் எம்மில் நாலாவது சகோதரன் சிவசுதன் அவர்கள் இயற்கை எய்தினார். பல்கலையில் கற்கவைத்து ஆசிரியராக்கி மணவிழா காண காத்திருந்தவேளை எம் சகோதரனின் இழப்பு எம் தாயின் உள்ளத்தை என்ன வேதனை அடைய வைத்திருக்கும்? அந்த துன்பத்தையும் எம் தாய் தன் மனதில் வைத்து பூட்டிஎம்மைத் தேற்றி மீண்டும் எம் நல்வாழ்விற்கு உழைத்தார்.

எம் இனிய தாய் துன்பங்களை எல்லாம் தான் மட்டுமே மனதில் பூட்டி எமக்கு துன்பம் எதுவும் அணுகாமல் காத்ததாலோ என்னவோ எம் தாயை இருதய நோயாளியாக்கி வேடிக்கை பார்த்தது இயற்கை.

எம்மை தனிமரமாய் நின்று ஆளாக்கிய எம் தாயை நாமும் மகிழ்ச்சியாக வாழவைக்க எண்ணி வெளிநாடு அழைத்து 2009 பங்குனி மாதம் முதல் நோர்வேயிலும் பின் 2009 கார்த்திகை மாதம் முதல் பிரான்சிலும் வைத்து பூப்போல தாங்கி நின்றோம். பிரான்சில் எமது தாய் நிரந்தரமாகத் தங்கியிருந்தபோதும் ஜேர்மன், நோர்வே, லண்டன் என எல்லா பிள்ளைகளிடமும் சென்று தங்கி மனமகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளைகளிற்கு வாழ்க்கை தேடிக் கொடுத்ததுடன் தன் கடமை முடிந்தது என்று நின்றுவிடாது மருமக்கள், பேரப்பிள்ளைகளை ஒன்றாக்கி தன் சிறகுகளினுள் அடக்கி காத்த எம் தாய் யாருக்கு எவ்வாறு உதவி செய்யலாம் எனும் சிந்தனையிலேயே எந்நேரமும் மூழ்கி இருப்பார். உதவி கேட்டு வருவோர்க்கு தன் பிள்ளைகளின் குடும்பங்கள் எல்லோரையும் ஒன்றாக இணைத்து எவ்வித மனக் கோணலுமின்றி முடிந்த உதவிகளைச் செய்து வைப்பார். கடவுள் பக்தி நிறைந்த எம் தாய் கோவில்கள் சென்று வழிபடுவதில் என்றுமே முன்நிற்பார். தான் பிறந்த ஊரான கைதடி வடக்கு கோவில்களான கயிற்றசிட்டி கந்தன், குருநாதர் கோவில், தானும் நாமும் கல்வி கற்ற கைதடி வடக்கு குருசாமி வித்தியாலயம் ஆகியவற்றிற்கு தன்னாலான உதவிகள் பலவற்றை புரிந்துவந்தார்.

இவ்வாறான போற்றுதற்கரிய எம் தாய் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை (Dialosis) மேற்கொள்ளும் போது யாரும் எதிர்பாராவண்ணம் 2017-4-5ம் திகதி பிரான்ஸ் வைத்தியசாலையில் குருநாதர் பாதம் சென்றடைந்தார்.

தனது நோயைக் குணமாக்கி தான் பிறந்த இடம் சென்று சிறிதுநாட் தங்கி சகோதரன், தன் உறவுகளைக் காணவேண்டும் என்ற அவா நிறைவேறாமலே போய்விட்டது. எமது தாயாரின் ஆத்மா சாந்திபெறவும் எம் தாய் மீண்டும் எம்மிடையே வந்திடவும் குருநாதர் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**உங்கள் அன்புச் செல்வங்கள்**
**மதி, சுகி, ஈசன், பரன், சிவா, தர்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மம்மா, அம்மாவுடன் நாங்கள்



அம்மம்மா



அம்மா, அப்பா



மறைந்த சகோதரனுடன் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மந்துவில் கிராம அலுவலர் பிரிவிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும்போது
மந்துவில் பாரதி மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரிவுபசார விழாவின்போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் கோவில் எம் அம்மாவிற்கு

அம்மா! பாசத்தின் குலவிளக்கே! உங்கள் முகத்தில்
கோபம் தனை நாம் கண்டதில்லையே
பாரினில் நான் உதிக்கவேண்டுமென்று
கடவுளை வரம் கேட்டு, எட்டாவது ஆண்டினில்
உங்கள் மடி தவழ்ந்தேனே
உங்களை போலொரு தாயை நான் பெற
என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டுமோ
தந்தையை இழந்தபின் தந்தையும் தாயுமாகி
ஆரா அமுதளித்து சீராட்டி பாராட்டி
சீரான கல்வி கற்க வழி செய்த தாயே
கஸ்ரம் பல பட்டு சிறுக சிறுக சேர்த்து
கஸ்ரமெதுவும் நாம் படாமல்
தன்னம்பிக்கை தனை ஊட்டி
மற்றோர் எமை குறை கூறாமல்
சிறப்பாக வளர்த்தீரே தாயே
என் தாய் இவரென இனியாரை நான் கூற
அம்மா!
அம்மா எனும் வார்த்தைக்கு அகராதி நீரெல்லோ
வசை பேசா உம் நாவும் இசைபாடும் உம் குரலும்
கள்ளமில்லா உம் உள்ளமும் கண்ணியமான உம் வார்த்தையும்
என்ன சொல்ல எதைச் சொல்ல அம்மா
என்றென்றும் என்மனம் தாங்காது வேதனையை

மங்காத எங்கள் பேரன்பு மாமியாரே குடும்பத்திற்கு
வந்த மூத்த மருமகன் என மனம் நிறைந்து
எனை மதித்து நடந்தீரே
உங்கள் மக்கள் துவண்டுவிழ எம் பிள்ளைகள்
ஏங்கி நிற்க எங்கு சென்றீர் புனிதமிகு மாமியாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மா உங்கள் மூத்தபேரன் எனும் பெருமையை
நான் பெற்றேனே என் அம்மம்மாவே
அன்பு மழை பொழிந்து ஆசை வார்த்தை பேசி
என் பேரர் என்று கூறி எமை அணைத்தீர்
நிச்சு, தரணி என ஒன்றாக அருகணைத்து
எம்மருகில் உறங்குவீர்களே
எத்துயரும் எமை அணுகிடாது
காத்த எம் அம்மம்மா
எம் புகழ் காணாது புயலாகச் சென்றது ஏன்
கண்மணியை இழந்தது போல்
கலங்கி நிற்கின்றோம்.
என்று தான் நாம் உமைக் காண்போம் இனி
எம் இனிய அம்மம்மாவே
உங்கள் இனிய ஆத்மா குருநாதர் கழல் சேர
பிரார்த்தித்து நிற்கும்

**பாசமகள் மதி, மருமகன் பத்மபாதன்**
**பேரப்பிள்ளைகள்**
**மோகனன், நிதர்சனன், தரணிகா**

## எமது உயிரான அம்மாவிற்கு...

அம்மா
உமைப்போல ஒரு தாய் கிடைக்காதா என பலர் ஏங்க
எமைப்போல யாருமே ஒரு தாயை பார்க்கமாட்டீர் என
நாம் சொல்ல எமக்கு கிடைத்த அற்புதமான பொக்கிஷமே
ஒரு மாதம் முடிந்துவிட்டது அம்மா
எம் கண்முன்னே உங்களை காலன் கொண்டு சென்ற
அந்த ஒரு நாளை வாழ்நாளில் மறக்கவே முடியாது தாயே!
எம் எண்ணங்கள் யாவும் உம்மோடிருக்க எமை
நீர் எண்ணாது உயிர்பிரிந்தது தான் ஏனோ அம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் நல் வாழ்க்கைக்கு நீர் பட்ட துன்பங்கள்
போதும் என எண்ணிவிட்டீரோ அம்மா
நாட்கள் செல்லச்செல்ல உங்கள் நினைவுகள் எம்மை
முள்ளாய் குத்தி வதைக்கிறது தாயே
நீர் எம்மருகே இல்லாததை ஜீரணிக்கவே முடியவில்லை.
எம் இதயக் கோவிலே எம் அம்மா
உங்கள் நினைவுகளை நீள நினைந்து
இருவர்க்கும் மீண்டும் பிறப்புண்டேல்
இனி எடுக்கும் பிறப்பெல்லாம் தொடர்ந்தும்
உங்கள் மகளாய் மலர விரும்புகின்றேன் தாயே.

நேரிய வாழ்வு கண்டு நெஞ்சை கொள்ளை கொண்டீர்
சீரிய பண்புகளால் பலரை நட்புக் கொண்டீர்
புல்லும் நோகாமல் மெல்லென நடந்திடுவீர்
உம் ஆசைக்கனவை எல்லாம் அள்ளி நிறைவேற்றிட
பாசமிகு மருகர் நாம் பக்கத்தில் காத்திருக்க
கல்நெஞ்சக் காலன் மெல்லக் கவர்ந்தனனே
எவ்வாறு நாம் மறப்போம் உமை

இச்சையுடன் கதைகள் கூறி எமை
பூப்போல காத்த அம்மம்மா
பூவுலகம் விட்டு நீங்கள் சென்றதேனோ அவரசரமாய்
துயரத்தை தாங்கமுடியாமல் துன்பத்தில் துவழ்கின்றோம்
எமதருமை அம்மம்மாவே!
உங்கள் புனித ஆத்மா குருநாதர் கழல் சேர பிரார்த்திக்கும்

**அன்பு மகள் சுகி மருமகன் மதி**
**பேரப்பிள்ளைகள்**
**கௌசி, பபிஷா, கார்த்திக்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாசத்தில் கலந்திட்ட எம் அம்மாவிற்கு...

அன்பான அம்மா எங்களை அன்போடு அறிவூட்டி
சமூகத்தில் நல்மனிர்களாக்கி விட்டு
திடீரென மறைந்திட்ட செய்தி கேட்டு ஒருகணம்
நான் தனியனாய் நின்று பட்ட துன்பம் யாரிடம் உரைப்பேன்
எம் உயர்ச்சியை கண்டு பூரிப்படைந்து
நீங்கள் பட்ட சுமைகளை சுகமாகக் கருதினீர்களே
எமைக்காண வருகிறேன் வருகிறேன் என்றீர்களே
காலனுடன் போராடி தோத்துத் தான் போனீர்களோ
அம்மா இவ்வுலகை விட்டு போகப் போகிறேன் என தெரிந்தோ
முதல் நாள் என்னுடன் கதைத்தீர்கள்
அம்மா எனக்குத் தெரியாமல் போய்விட்டது அம்மா
நீங்கள் என்னுடன் கதைப்பது இதுதான் இறுதி என்று
நான் இனி என்று கேட்பேன் உங்கள் இனிய குரலை
அம்மா உங்களை இறுதி வழியனுப்பக்கூட வரமுடியாமல்
நானும் இறைவனிடம் தோற்றுத்தான் போனேன் அம்மா
சிறுவயது முதல் எமை வளர்த்து ஆளாக்க பட்ட இன்பதுன்பங்கள்
என்றென்றும் எம்மனதில் பசுமையாக நிலைத்திருக்கும்
இனிய நாட்கள் எதுவென்றாலும் அதிகாலையிலேயே வாழ்த்துக் கூறுவீர்களே
இனி அந்த வாழ்த்தொலியை எவ்வாறு நாம் கேட்போம்?
அம்மா நீங்களும் இனி அப்பா, சுதனுடன் எம் வீட்டுச் சுவரில்
நிழல்படமாகவா இருந்து எமை வழிநடாத்தப் போகிறீர்கள்?

வார்த்தைகளில் வடித்திடமுடியா எம் அருமை மாமி
கடமை முடிந்தது என்று கண்களை தான் மூடினீரோ
என்றும் எம் வழிகாட்டியே எப்படி முடிந்தது உங்களால்
தன்னந்தனியே துன்பங்களை சுமந்து இன்பம் மட்டும் எமக்களித்து
பிள்ளைகள் ஏழ்வரையும் பார் போற்ற வளர்த்து
ஒருவர் துன்பத்தை தன் துன்பமாய் உணர்ந்திடும் பிள்ளைகளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி – மாமி
எம் வாழ்க்கையில் இழக்கக்கூடாத உங்களை இழந்துவிட்டோம் தாயே
நீங்கள் எம் சுவாசக்காற்றாய் கலந்து என்றென்றும் வாழ்ந்திடுவீர்கள்
எம் சுவாசம் நிற்கும்போதே உங்கள் நினைவுகள் எமைவிட்டுச் செல்லும்
நீங்கள் விட்டுச் சென்ற எச்சங்கள் நாம் ஒன்றாய் சேர்ந்து
என்றென்றும் உங்கள் புகழை நிலைநாட்டுவோம்

அப்பம்மா கடைசிவரை எமைப் பார்க்காமலே சென்றுவிட்டீர்களே
அப்பா அம்மா வேலைக்குச் செல்ல அப்பம்மா எனை நீங்கள் 8ம் மாதத்திலேயே
தனியே தாங்கி தர்ஷி அத்தையுடன் உணவூட்டி
அரவணைத்து காத்த கதை நானறிவேன்
அப்பம்மா பச்சிளம் பாலகனாய் நானிருந்தபோதே
ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம்
பூமணியை வாங்கமுடியுமா என பாடியது
உங்களிற்கு நினைவிருக்கோ அப்பம்மா?
வாங்கவே முடியாது அப்பம்மா உங்களைப் போல ஓர் அப்பம்மாவை
உங்கள் அன்பு மழையில் அருகிருந்து நனைந்திட
என் தம்பியர்க்கு மட்டும் வரம் கிடைக்கவில்லையே அப்பம்மா!
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி நிற்கும்

**மகன் ஈசன், மருமகள் தீபா**
**பேரப்பிள்ளைகள் – ஹரிஸ், டனுஸ், மனுஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசதீபம் எம் அம்மாவிற்கு...

அன்பான அம்மா அதிகம் பேசமாட்டாய்
இன் சொல்லே பேசி இடித்துரைப்பாய்
பன்னெடு நாள் உன்னோடு வாழும்
இன் பாக்கியம் தான்கிட்டவில்லை எனக்கு
அன்னையே
அன்பாய் எனை நீ பரன் என அழைக்கும்
தெம்பான வார்த்தை இனி செவிதனில் கேட்காதோ?
பண்பாய் புன்னகைக்கும் முகம் என் முன்னால் தோன்றாதோ?
நீ காத்த கூட்டினில் நானும் ஒரு குஞ்சு
நீ வார்த்த நீரினில் வளர்ந்த செடிகளில் நானும் ஒரு செடி
தீ பட்டுவிட்டது போல் துவண்டு அழுகின்றேன்
என் சோகம் தீர்த்திடவே திரும்பி வரமாட்டாயோ

மாமி என்ற உறவை மாதா என்றே நான் மதிப்பேன்
மாசில்லா உங்கள் அன்பில் மனம் தான் மகிழ்ந்திருந்தேன்
பூமியிலே எமை மட்டும் புலம்பி அழ விட்டுவிட்டு
புதுவாழ்வு தேடி நீங்கள் பொன்னுலகு சென்றீரோ
ஞாலம் கசந்ததென்று நல்லுலகம் சென்றீரோ
நாங்கள் மனம் கலங்க குருநாதர் பதம் சேர்ந்தீரோ

அப்பம்மா என்று நாம் அழைக்கும் குரல் கேளாமல்
சும்மா போய் எங்கோ ஒளித்தோ உள்ளீர்கள்
வேதிகா யசிகா என அழைக்கும் உங்கள் குரல்
எம் காதினில் ஒலிக்கிறதே
பாட்டு கதைகள் என பலப்பலவாய் எங்களுக்கு
வீட்டில் இருந்து சொல்லித்தரும் உங்களுக்கு
என்ன நடந்ததென்று எமக்கு புரியவில்லை
தேடித்திரிகின்றோம் சென்ற இடம் தெரியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் நீர் மல்க காத்திருப்போம் – உங்களுக்காய்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மகன் பரன்**
**மருமகள் சர்மிலா**
**பேர்த்திகள் வேதிகா, யசிகா**

## இனிய என் அம்மாவிற்கு...

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் என கேட்ட தாயாக
எமை வளர்த்த என் இனிய அம்மா!
வாழ்க்கையின் இளம் தளிரில்
வாழ்வின் இனிமையான துணை
இறைவன் பாதம் அடைந்துவிட
இனிய சின்னப்பிள்ளைப் பூக்களுடன்
குருநாதர் அருள்செய்ய வாழ்க்கையை தொடர்ந்தீர்கள்
எங்கள் வாழ்க்கையின் ஒளிவிளக்காய்
எம்முடன் துணையாய் இருந்தீர்கள்
என் மனைவி பிள்ளைகளுக்கு
என்றும் குறையாத அன்பும் ஆதரவும்
நன்றாக நல்கி எமை வழிகாட்டிய
நம் குடும்பத்தின் இனிய விளக்கு நீங்கள்
தினமும் சிவனை நினைப்பது போல்
சிவா சிவா என உச்சரித்த நாமம்
என் காதினிலே ஒலிக்கின்றது
புதுமனையில் என் விருட்சங்களை
அறிவூட்டுவீர் என கனவு கண்டேன்
கனவுகளை நனவாக்காமல் நீங்கள் சென்றதெங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா, நீங்கள் அப்பாவுடன்
இறைவன் பாதத்தில் வாழ
இரங்கலுடன் ஆத்ம சாந்தியடைய
பிரார்த்திக்கும் உங்கள் இளைய பிள்ளை

கடல் கடந்து வந்து எனது இனிய
வாழ்க்கை பயணிக்கையில்
தாயின் அன்பும் ஆதரவும் தந்த
என் இனிதான மாமி நீங்கள்
என் வாழ்க்கை சிறப்பின்
அத்திவாரமான இனிய துணையை
இவ் உலகிற்கு தந்தவர் நீங்கள்
மருமகளே என அழைக்காமல்
என் இனிய இளைய மகளே என
நீங்கள் அழைக்கும் வார்த்தைகள்
என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன
மாமி நீங்கள் இவ்வுலகைவிட்டு
சென்றபின் அன்னையின் ஆதரவில்லாமல் புலம்புகின்றேன்.

எமது இனிய அப்பம்மாவே!
எங்களை விட்டு சென்றதெங்கே
சலிப்பு என்பதை சிறிதும் அறியாமல்
எங்களுடன் பந்து விளையாடுவீர்கள்
இனியாருடன் நாம் பந்து விளையாடுவோம்
ஒவ்வொரு இனிதான நிகழ்வுக்கும்
இனிதான பரிசு தந்த அப்பம்மா
உங்களைக் காணாது தேடுகின்றோம்
உங்கள் தூக்கம் கலைத்தாலும்
நீங்கள் முத்தமழை மட்டுமே புரிவீர்கள்
சிஸ்நா, டிசிகரன் எனும் நாமத்தால்
எம் இருவரையும் ஆசையுடன் அழைத்தீர்கள்
எங்கே கேட்பது இனி உம் இன்மொழியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் பிரிவை நாமறியோம்
உங்களை காணத் துடிக்கின்றோம்.
சென்றனையோ இறைபாதம்
எமை காண வாராயோ
நீங்கள் சென்ற வழி பார்த்து
நீர் சொரிந்து நிற்கின்றோம்.

**மகன் சிவா**
**மருமகள் விஜிதா**
**பேரப்பிள்ளைகள் சிஸ்னா, ருஷிகரன்**

## உயிரோவியம் எம் அம்மாவிற்கு!

நான் பிறந்தது முதல் எனக்கு தாயாக மட்டுமில்லை
தந்தையுமாகி இருந்தீர்களே அம்மா
நான் எதை விரும்பிக் கேட்டாலும்
இன்முகத்துடன் நிறைவேற்றி வைத்தீர்களே
இன்றேன் வேரற்ற மரமாய் சாய்ந்திட வைத்தீர்
விழி நீரை மழையாய் சொரிந்தே நிற்கின்றேன்
அன்பான தாய் நீர் நெடுந்தூரம் போக
சிறகற்ற பறவையாய் ஆனேன் நானே
பாசத்தின் சிகரமே எனைப் பார்க்காமல்
எங்குதான் சென்றீர்கள்?
மோட்சத்தை நீர் தேடிச்செல்ல
மோசந்தான் போனேன் நானே
நீண்டதூரம் பிரிந்து சென்று
எனை ஏன் தவிக்கவிட்டீர்
முடிந்தது எல்லாம் என்று ஏன் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் என்னை புலம்பவிட்டீர்?
குடி கொண்டீர் சொர்க்கலோகம்
குறை யென்ன விட்டோமிங்கே
மீண்டும் எம்மிடமே ஓடோடி வந்திடுங்கள்

மாமி என்று நாமழைக்க
பெற்றவள் போல் இருந்த மாமி
உங்கள் உள்ளத் தூய்மைக்கு
நிகரானோர் எவருமில்லை.
எம்மருமை மாமியாரே
மருமக்கள் நாம் மனைபுகுந்த நாள்முதலாய்
கருமம் அத்தனையும் கச்சிதமாய் செய்து
உரிமையாய் பழகி நம்மை வாழ்த்தி வாழ்ந்தீரே
உற்றவரே உமைப்பிரிந்து துடிக்கின்றோம்
எமதருமை மாமியாரே

எம் இதயத்தில் நிறைந்த அன்பான அம்மம்மா
உங்கள் கடைக்குட்டி மகளின் பேரர் நாம்
கலங்கித்தான் துடிதுடிக்க எங்கு தான்
சென்றீர் எமதருமை அம்மம்மா
உமை இழந்ததால் இடிந்ததெம் இதயக்கோட்டை
மறுபடி உமை எம்மிடையே
காணும் நாள் வாராதோ அம்மம்மா

உங்கள் மாசற்ற ஆத்மா இறைவன் கழல் சேர பிரார்த்திக்கும்

**செல்லமகள் தர்ஷி,**

**மருமகன் கரன்**

**பேரமக்கள் வினோஜ், கஸ்வின், சஷ்வின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரன் புவனேஸ்வரன் மனதிலிருந்து...

### அன்புச் சகோதரி

எமது பெற்றோருக்கு நானும், எனது சகோதரி பூமணியும் மட்டும் இரு பிள்ளைகள். அண்ணை என்று எனது தங்கையும், தங்கச்சி என்று நானும் ஒருவருக்கொருவர் அன்பால் பின்னிப்பிணைந்து ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்து வந்தோம். எனது தங்கை திருமணமாகி மைத்துனருடன் இடமாற்றங்கள் பெற்றுச் சென்றாலும் கிழமைக்கு ஒரு தடவை தங்கை வீட்டிற்குச் சென்று தங்கை கையால் உணவு வாங்கி உண்பேன். மைத்துனர் இறந்தபோது எனது தங்கை பட்ட குடும்ப கஷ்டம் எனக்குத் தெரியும். இருந்தும் இன்று தங்கையின் பிள்ளைகள் சிறப்பாக வாழ்வது மனமகிழ்ச்சியை தருகின்றது. எனது தங்கை, இலங்கை வந்து தனது மகனை, உடன் பிறப்பாகிய என்னை, இனபந்துக்களை காண்பதற்கு ஆவலுடன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்ததாக அறிந்தேன். தனது ஏனைய பிள்ளைகளிடம் இங்கு வந்து யாருக்கு என்ன உதவி செய்வது என்பது பற்றிக் கேட்டுக் கொண்டிருந்ததாக கூறினார்கள். இதை எண்ணும்போது எனது மனம் துன்பத்தால் துவழ்கின்றது. நானும் எனது தங்கையின் வருகைக்காக காத்திருந்து ஏமாந்துவிட்டேன். காலன் சதி செய்துவிட்டான். தங்கையே மறுபிறப்பிலும் நாம் சகோதரர்களாகச் சந்திக்க வேண்டும். உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**– சகோதரன் புவனேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் பூமணி அவர்கள் 1943ம் ஆண்டு அமரர்கள் இராமலிங்கம் மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட மகளாகப் பிறந்தார். அவர் தனது கல்வியை கைதடி குருசுவாமி வித்தியாலயத்திலும் முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்திலும் கல்வி பயின்று சிறப்புச் சித்திகளையும் பெற்றார். அவர் திருமணப் பருவம் அடைந்தபோது எமது தேவஸ்தானத்தின் சிறப்பு பூசகர் குருநாதரின் மகன் சின்னத்துரையை 1960 ம் ஆண்டு திருமணம் செய்தார். அன்னாருக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் மூன்று பெண் பிள்ளைகளும் பிறந்தார்கள். அன்னார் சிறு வயதிலே தனது தாயாருடன் எமது சிவகுருநாதர் சுவாமியின் செவ்வாய் வெள்ளி மற்றும் விஷேச பூசைகளிலும் பக்திபூர்வமாகக் கலந்துகொள்வார். அன்னாரின் கணவர் அமரர் சின்னத்துரை (வடிவேலு விதானையார்) கிராமசேவையாளராக இருந்தபோது எமது மக்களுக்கு பெரும் சேவை செய்துள்ளார். அக்காலத்தில் எமது தேவஸ்தானத்துக்கு தலைவராகவும் போசகராகவும் இருந்து பல திருப்பணி வேலைகளைச் செய்தார்.

கணவரின் திருப்பணி வேலைகளில் அமரர் பூமணியும் பக்கபலமாக இருந்தார். 1984ம் ஆண்டு கணவர் காலம் சென்ற பின்னர் தனது பிள்ளைகள் எழுவரையும் குருநாதரின் கிருபையால் கல்வி பயின்று முன்னேற்றம் அடையச் செய்தார். தனது கணவரைப் போலவே தனது பிள்ளைகளையும் எமது குருநாதர் சுவாமிக்கு திருப்பணி வேலைகளுக்கு ஈடுபாடு செய்ய ஊக்குவித்தார். அன்னாரின் மகன் சிவசுதன், தாயார் குருநாதர் திருப்பணிகளைச் செய்யும் காலத்தில் 2007ம் ஆண்டு அமரராகிவிட்டார்.

அன்னாரின் மறைவின்பின் அவரின் சகோதரர்களை எமது தேவஸ்தானத்துக்கு திருப்பணிகளைச் செய்வதற்கு அமரர் பூமணி பக்கபலமாக நின்று ஊக்குவித்தார். அதன் பயனாக புலம்பெயர் நாட்டில் வாழும் தன் மகன்மாராகிய சிவகரன், சிவபரன், மகள்மார்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணி வேலைகளில் ஈடுபாடு செய்ய ஊக்குவித்தார். இதன் பயனாக அன்னாரின் பிள்ளைகள் முயற்சியால் புலம்பெயர் நாடுகளில் உள்ள உறவினர்களின் உதவியுடன் எமது தேவஸ்தானத்துக்கு மிகவும் அழகான வில்லு மண்டபம் அமைத்து தந்துள்ளார்கள். அதன் பெருமை அமரர் பூமணியையே சேரும். அன்னாரின் மூத்தமகன் ஈசன் தற்போதும் தலைவராக இருந்து தந்தையார் தாயாரின் பணிகளைச் செய்துகொண்டு வருகிறார். அமரர் பூமணியின் பிள்ளைகள் எமது தேவஸ்தானத்துக்கு இன்னும் பல திருப்பணிகளைச் செய்யவேண்டும். அவர்கள் நலத்துடன் இருக்கவேண்டும் என்று அமரர் பூமணியின் பெயரால் எல்லாம்வல்ல கிருச்சியால்புலம் சிவகுருநாதர் சுவாமி அருள்புரிவாராகவும் பூமணியின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம் என்று ஆலய பரிபாலன சபை சார்பாகவும் வழிபடுவோர் சபை சார்பாகவும் அமரர் பூமணிக்கு சமர்ப்பிக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**சிவகுருசுவாமி தேவஸ்தான பரிபாலன சபை**
கிருச்சியால்புலம்,
கைதடி வடக்கு,
கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்



மலர்வு
12.09.1943

உதிர்வு
05.04.2017

## அமரர் சின்னத்துரை பூமணி

கைதடி வடக்கு சிவகுருநாதர் சுவாமி தேவஸ்தான முன்னாள் தலைவர் கு.சின்னத்துரையின் மனைவியும், தற்போதய தலைவர் சி.கௌரீசன் அவர்களின் தாயரும் ஆவார்.

அன்னார் எமது தேவஸ்தான வளர்ச்சிக்காக கணவருடன் சேர்ந்து பெரும்பங்காற்றிய பெருந்தகையாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சிவகுருசுவாமியை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி வடக்கு,
கைதடி.
8.4.2017

சிவகுருசுவாமி தேவஸ்தான
பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

# அமரர் திருமதி பூமணி சின்னத்துரை

**மலர்வு 10.10.1943.** **உதிர்வு 05.04.2017.**



பாசத்துக்கும் நேசத்திற்கும் பரிபூரணம் கொண்டவளாய் கைதடி வடக்கு இராமலிங்கம் மாணிக்கம் தம்பதியர்க்கு பல்வளமும் குறைவில்லா செல்வமாய் புவணத்தில் பூத்த பூமணியே!
ஈன்றவருக்கும் கொற்றவனுக்கும் குலவிளக்காய் குடும்பப்பாங்காய் நீ வாழ்ந்த வாழ்வு – போதுமென்று நீண்ட தூரம் பயணிக்க –நீ துணிந்துவிட்டாயே நீ பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங்களின் முகங்காணமுடிகிறது.
அன்புக்கரம் நீட்டிய அம்மாவை இனி எங்குதேடுவோம்என?
இல்லற வாழ்வுதனில் எம்குலதெய்வ குருநாதனின் மகன் வடிவேல் அழகனை கைகோத்தாய். பிள்ளைச்செல்வத்தை வேண்டவே நயினை நாகபூசனியாளும் சுமதி, சுகி ,ஈசன்,சுதன்,பரன்,சிவா,தர்சி,என நீ அழைக்கும் சொத்துக்களை தந்தாள் உன்வாழ்க்கை வசந்தமாய் வீசியதே! வாழ்க்கைபாதியிலே கொற்றவனை இழந்தபோதும் உன் அன்புத்தாயின் அரவணைப்புடனும் உன்அருமை அண்ணன் சிவலிங்கம் உன்பெயர் சொல்லி அறியான் தங்கச்சி என்றே அழைப்பான்,அவனின் சயீர உதவியுடன் உன்பிள்ளை செல்வங்களை கல்விநலம் பெருக்கி உயர்கல்விவரை படிக்க வைத்தாய்,நல்ல இல்லற வாழ்க்கையையும் அமைத்து கொடுத்தாய் மூத்த இரு பெண் பிள்ளைகளையும் கைதடியில் கிட்டிய உறவினருக்கே மணவாழ்க்கையையும்அமைத்துகொடுத்தாய்,பேரச்செல்வங்களையும் சீராட்டி வளத்து அகமகிழ்ந்தாய்,இம்முன்னேற்றத்துக்கு காரணமே உன்பொறுமையும் அமைதியும்தான்!
நாட்டுப்பிரச்சனையால் நன்மகன்சுதனை இழந்தாய் அம்மா துவண்டாய் துடிதுடித்தாய் !தாங்கமுடியாமல் தாய்மண்ணில் இனிது வாழவழிஇன்றி அன்புமக்களைகாண ஆசையுடன் ஓடிவந்தாய். கடைக்குட்டி சிவாவின் திருமணத்தை திருப்தியுடன் கண்டுகளித்தாய். பிள்ளைகளிடம் ஜேர்மன், நோர்வே, லண்டன், என ஆறிவருவாய்! அம்மா மூத்த மகளிடம் ஜேர்மன் வரும் போதெல்லாம் எசன் வாழ் மக்களையும் கவர்ந்தாய் அம்மா. முக்கனி சோலையுடன் முது மரங்கள் தென்னை பனை உடன் சுற்றி வர வாழைத் தோட்டம் அங்கே உன்தன் வீட்டு முற்றம் தன்னில் மல்லிகை முல்லைப் பந்தல் கீழே பளபளக்கும் குடம் தன்னில் நிறைந்திருக்கும் தண்ணீரை உன்தாய் எங்கள் களைப்பு தீர பல குவளை தந்திடுவாள் மறக்கவில்லை. உன் இருப்பிடமாம் ஈழம் சென்று குல தெய்வங்களையும் ஈசனையும் இதயத்து உறவுகளையும் பாசத்துடன் பார்ப்பதக்கும் அவர்களும் பூமணி அக்காவின் வருகைக்காய் காத்திருக்கும் வேளை காலனவன் உன் கண்களை மூடியது ஏனோ? கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்னுணர்த்தி உன்னையும் உன்பிள்ளைகளையும் அவ்அப்போது கோயில் பணிகளில் அர்ப்பணித்து நீ வாழ்ந்து காட்டிய விடயங்கள் பசுமரத்து ஆணி போல் பசுமையாய் நிறைந்திருக்கும் உன்பிரிவால் துயருறும் பிள்ளைகளுக்கும் சுற்றத்தாருக்கும் நல்லாறுதல் கிடைக்கவேண்டி உன் ஆத்மா சாந்தியடையவும் இறைபாதங்களை வேண்டி நிற்கும்.

கைதடி வடக்கு உறவினர்களும் நண்பர்களும்

ஜேர்மன் வாழ் மக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். திருமதி. சின்னத்துரை பூமணி



எமது கல்லூரி ஆசிரியர்
**சி. கௌரீசன்** அவர்களின்
அன்புத் தாயார்
**அமரர். திருமதி. சின்னத்துரை பூமணி**
அவர்கள் 05.04.2017
புதன்கிழமையன்று பிரான்சில்
காலமானார். அன்னாரின் பிரிவால்
துயரடைந்திருக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

(8537)

**கல்லூரிச் சமூகம்,**
**யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதியார் பாடல்கள்

## தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன
தான தந்தா னே.

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

2. வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

3. ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

4. எங்கள் தமிழ்மொரி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே!

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமர ராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். 1

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை
உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! 2

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

## அன்னையை வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்தநல் லறிவு வேண்டும்;
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல,
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

## காளிப் பாட்டு

1. யாது மாகி நின்றாய் - காளி!
எங்கும் நீ நிறைந்தாய்;
தீது நன்மை யெல்லாம் - காளி!
தெய்வ லீலை யன்றோ!
பூத மைந்தும் ஆனாய் - காளி!
பொறிக ளைந்தும் ஆனாய்;
போத மாகி நின்றாய் - காளி!
பொறியை விஞ்சி நின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இன்ப மாகி விட்டாய் - காளி!
என்னு ளேபு குந்தாய்;
பின்பு நின்னை யல்லால் - காளி!
பிறிது நானும் உண்டோ?
அன்ப ளித்து விட்டாய் - காளி!
ஆண்மை தந்து விட்டாய்;
துன்பம் நீக்கி விட்டாய் - காளி!
தொல்லை போக்கி விட்டாய்.

## காணி நிலம் வேண்டும்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும்-அங்கு,
தூணில் அழகியதாய்-நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்-அந்தக்
காணி நிலத்திடையே-ஓர் மாளிகை
கட்டித் தரவேணும்-அங்கு,
கேணி யருகினிலே-தென்னைமரம்
கீற்று மிளநீரும் 1

பத்துப் பன்னிரண்டு-தென்னைமரம்
பக்கத்திலே வேணும்-நல்ல
முத்துச் சுடர்போலே-நிலாவொளி
முன்புவர வேணும்?அங்கு
கத்துங் குயிலோசை-சற்றே வந்து
காதிற்பட வேணும்-என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே-நன்றாயிளந்
தென்றல்வர வேணும். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக் கலந்திடவே-அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும்-எங்கள்
கூட்டுக் களியினிலே-கவிதைகள்
கொண்டுதர வேணும்-அந்தக்
காட்டு வெளியினிலே,-அம்மா! நின்தன்
காவலுற வேணும்என்தன்
பாட்டுத் திறத்தாலே-இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

## நல்லதோர் வீணை

நல்லதோர் வீணைசெய்தே-அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி, சிவசக்தி-எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ,-இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி,சிவசக்தி!-நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

விசையுறு பந்தினைப்போல்-உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையுறு மனங்கேட்டேன்-நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும்-சிவ
சக்தியைப் பாடும்நல் அகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன் இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன்-என் விளையாட்டுப் பிள்ளை

**கேதாரம்–கண்டஜாதி–ஏகதாளம்**
**ரசங்கள்–அற்புதம், சிருங்காரம்.**
தீராத விளையாட்டுப் பிள்ளை-கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை.

(தீராத)

தின்னப் பழங்கொண்டு தருவான்-பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால்-அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்.

(தீராத)

தேனொத்த பண்டங்கள் கொண்டு-என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான்-சற்று
மனமகிழும் நேரத்தி லேகிள்ளி விடுவான்.

(தீராத)

அழகுள்ள மலர்கொண்டு வந்தே-என்னை
அழஅழச் செய்துபின் "கண்ணை மூடிக்கொள்
குழலிலே சூட்டுவேன்" என்பான்-என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.

(தீராத)

பின்னலைப் பின்னின் றிழுப்பான்-தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்
வன்னப் புதுச்சேலை தனிலே-புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்.

(தீராத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாங் குழல்கொண்டு வருவான்-அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்,
கள்ளர்ல் மயங்குவது போலே அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்.

(தீராத)

அங்காந் திருக்கும்வாய் தனிலே-கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்
எங்காகிலும் பார்த்த துண்டோ?-கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ?

(தீராத)

விளையாட வாவென் றழைப்பான்-வீட்டில்
வேலையென் றாலதைக் கேளா திழுப்பான்
இளையாரொ டாடிக் குதிப்பான்-எம்மை
இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான

(தீராத)

அம்மைக்கு நல்லவன், கண்டீர்!-மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கு மஃதே,
எம்மைத் துயர்செய்யும் பெரியோர்-வீட்டில்
யாவர்க்கும் நல்லவன் போலே நடப்பான்.

(தீராத)

கோளுக்கு மிகவுஞ் சமர்த்தன்-பொய்மை
சூத்திரம் பழிசொலக் கூசாக் சழக்கன்
ஆளுக் கிசைந்தபடி பேசித்-தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகா தடிப்பான்.

(தீராத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன்-என் சேவகன்

கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாம் தாம்மறப்பார்
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்
"ஏனடா,நீ நேற்றைக் கிங்குவர வில்லை"யென்றால்,
பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த தென்பார்
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார்

பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்
ஓயாமல் பொய்யுரைப்பார்ஒன்றுரைக்க வேறுசெய்வார்
தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம் பலத்துரைப்பார்
எள்வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்

சேவகரால் பட்ட சிரமமிக வுண்டு,கண்டீர்
சேவகரில் லாவிடிலோ,செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்
எங்கிருந்தோ வந்தான்"இடைச் சாதி நான்"என்றான்
"மாடுகன்று மேய்த்திடுவேன்,மக்களை நான் காத்திடுவேன்

வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்
சொன்னபடி கேட்பேன் துணிமணிகள் காத்திடுவேன்
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்
காட்டுவழி யானாலும்,கள்ளர்பய மானாலும்,

இரவிற் பகலிலே எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை,தேவரீர் தம்முடனே
சுற்றுவேன் தங்களுக்கோர் துன்பமுறா மற்காப்பேன்
கற்ற விதத்தை யேதுமில்லைகாட்டு மனிதன்ஐயே!
ஆன பொழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிவேன்சற்றும் நயவஞ் சனைபுரியேன்"
என் றுபல சொல்லி நின்றான்."ஏதுபெயர்? சொல்" என்றேன்
"ஒன் றுமில்லை கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை" என்றான்
கட்டுறுதி யுள்ளவுடல் கண்ணிலே நல்லகுணம்,
ஒட்டுறவே நன்றா உரைத்திடுஞ்சொல்-ஈங்கிவற்றால்,

தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,
"மிக்கவுரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய்
கூலியென்ன கேட்கின்றாய்? கூறு"கென்றேன்."ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை
நானோர் தனியாள் நரைதிரை தோன்றா விடினும்

ஆன வயதிற் களவில்லைதேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனைநெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை"யென்றான்.
பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே
கண்டு மிகவும் களிப்புடனே நானவனை

ஆளாகக் கொண்டுவிட்டேன்.அன்று முதற்கொண்டு,
நாளாக நாளாக,நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்கண்ணனால்
பெற்றுவரும் நன்மையெலாம் பேசி முடியாது
கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல்,என்குடும்பம்

வண்ணமுறக் காக்கின்றான்.வாய்முணுத்தல் கண்டறியேன்
வீதி பெருக்குகிறான்வீடுசுத்த மாக்குகிறான்
தாதியர்செய் குற்றமெலாம் தட்டி யடக்குகிறான்
மக்களுக்கு வாத்தி,வளர்ப்புத்தாய்,வைத்தியனாய்
ஒக்கநயங் காட்டுகிறான் ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர் வாங்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்,
எங்கிருந்தோ வந்தான்.இடைச்சாதி யென்று சொன்னான்.
இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்து விட்டேன்!

கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்ச்
செல்வம்,இளமாண்பு,சீர்,சிறப்பு,நற்கீர்த்தி,
கல்வி,அறிவு,கவிதை,சிவயோகம்,

தெளிவே வடிவாம் சிவஞானம், என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண்!
கண்ணனைநான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்!
கண்கொண்டேன்!
கண்ணனை யாம்கொள்ளக் காரணமும் உள்ளனவே!

## நந்த லாலா

**ராகம்–யதுகுல காம்போதி** **தாளம்–ஆதி**

காக்கைச் சிறகினிலே நந்த லாலா!-நின்தன்
கரியநிறந் தோன்று தையே நந்த லாலா!
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா!-நின்தன்
பச்சை நிறந் தோன்று தையே நந்த லாலா!
கேட்கு மொலியி லெல்லாம் நந்த லாலா!-நின்தன்
கீத மிசக்குதடா நந்த லாலா!
தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா!-நின்னைத்
தீண்டு மின்பந் தோன்று தடா நந்த லாலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணம்மாவின் காதல்

காற்று வெளியிடைக் கண்ணம்மா!-நின்தன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன்-அமு
தூற்றினை யொத்த இதழ்களும்-நில
வூறித் ததும்பும் விழிகளும்-பத்து
மாற்றுப்பொன் னொத்தநின் மேனிம்-இந்த
வையத்தில் யானுள்ள மட்டிலும்-எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே-இங்கொர்
விண்ணவ னாகப் புரியுமே!-இந்தக் (காற்று வெளி)

நீயென தின்னுயிர் கண்ணம்மா!-எந்த
நேரமும் நின்தன்ப் போற்றுவேன்-தயர்
போயின போயின துன்பங்கள்-நினைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே-என்தன்
வாயினி லேயமு தூறுதே-கண்ணம்
மாவென் றபேர்சொல்லும் போழ்திலே-உயிர்த்
தீயினி லேவளர் சோதியே!-என்தன்
சிந்தனையே என்தன் சித்தமே!-இந்தக் (காற்று வெளி)

## கண்ணம்மாவின் நினைப்பு

**பல்லவி**

நின்னை யே ரதியென்று நினைக்கிறேனடி-கண்ணம்மா!
தன்னையே சகியென்று சரணமெய்தினேன்!
(நின்னையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணங்கள்

பொன்னை யே நிகர்த்த மேனி மின்னை ய, நிகர்த்த சாயற்
பின்னை யே!-நித்ய கன்னியே! கண்ணம்மா!

(நின்னையே)

மார னம்புக ளென்மீது வாரி வாரி வீச நீ-கண்
பாரா யோ? வந்த சேரா யோ? கண்ணம்மா?

(நின்னையே)

யாவு மே சுக முனிக் கொர் ஈசனா னெக்குன் தோற்றம்
மேவு மே-இங்கு யாவு மே,கண்ணம்மா!

(நின்னையே)

## கண்ணம்மா-என் காதலி

**குறிப்பிடம் தவறியது**

செஞ்சுருட்டி-ஆதிதாளம்

சிருங்கார ரசம்
தீர்த்தக் கரையினிலே-தெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே,
பார்த்திருந்தால் வருவேன்-வெண்ணிலாவிலே
பாங்கியோ டென்று சொன்னாய்
வார்த்தை தவறிவிட்டாய்-அடி கண்ணம்மா!
மார்பு துடிக்கு தடீ!
பார்த்த விடத்திலெல்லாம்-உன்னைப்போலவே
பாவை தெரியு தடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனி கொதிக்கு தடி!-தலை சுற்றியே
வேதனை செய்கு தடீ!
வானி லிடத்தை யெல்லாம்-இந்த வெண்ணிலா
வந்து தழுவுது பார்!
மோனத் திருக்குதடீ! இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே,
நானொருவன் மட்டிலும்-பிரி வென்பதோர்
நரகத் துழலுவதோ?

கடுமை யுடைய தடீ!எந்த நேரமும்
காவலுன் மாளிகையில்
அடிமை புகுந்த பின்னும்-எண்ணும்போது நான்
அங்கு வருதற் கில்லை
கொடுமை பொறுக்க வில்லை-கட்டுங் காவலும்
கூடிக் கிடக்கு தங்கே
நடுமை யரசி யவள்-எதற் காகவோ
நாணிக் குலைந்திடுவாள்.

கூடிப் பிரியாமலே ஓரி-ராவெலாம்
கொஞ்சிக் குலவி யங்கே
ஆடி விளை யாடியே,-உன்றன் மேனியை
ஆயிரங் கோடி முறை
நாடித் தழுவி மனக்-குறை தீர்ந்து நான்
நல்ல களி யெய்தியே
பாடிப் பரவசமாய்-நிற்கவே தவம்
பண்ணிய தில்லை யடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மா-என் காதலி

### யோகம்

பாயு மொளி நீ யெனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு,
தோயும் மது நீ யெனக்கு, தும்பியடி நானுனக்கு.
வாயுரைக்க வருகுதில்லை, வாழி நின்றன் மேன்மையெல்லாம்
தூயசுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மா!

வீணையடி நீ யெனக்கு,மேவும் விரல் நானுனக்கு
பூணும் வடம் நீ யெனக்கு,புது வரிம் நானுனக்கு்
காணுமிடந்தோறு நின்றன் கண்ணி னொளி வீசுதடீ
மாணுடைய பேர ரசே! வாழ்வு நிலையே!கண்ணம்மா!

வான மழை நீ யெனக்கு வண்ண மயில் நானுனக்கு
பான மடி நீ யெனக்கு,பாண்டமடி நானுனக்கு்
ஞான வொளி வீசுதடி,நங்கை நின் றன் சோதிமுகம்,
ஊனமறு நல்லழகே! ஊறு சுவையே! கண்ணம்மா!

வெண்ணிலவு நீ யெனக்கு,மேவு கடல் நானுனக்கு
பண்ணு சுதி நீ யெனக்கு,பாட்டினிமை நானுனக்கு்
எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர் எண்ணமில்லை நின்சுவைக்கே
கண்ணின் மணி போன்றவளே! கட்டியமுதே!கண்ணம்மா!

வீசு கமழ் நீ யெனக்கு,விரியுமலர் நானுனக்கு
பேசுபொருள் நீ யெனக்கு,பேணுமொழி நானுனக்கு
நேசமுள்ள வான்சுடரே! நின்னழகை யேதுரைப்பேன்?
ஆசை மதுவே!கனியே!அள்ளு சுவையே கண்ணம்மா!

காதலடி நீ யெனக்கு,காந்தமடி நானுனக்கு்
வேதமடி நீ யெனக்கு,வித்தையடி நானுனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதமுற்ற போதினிலே பொங்கி வருந் தீஞ்சுவையே!
நாதவடி வானவளே! நல்லஉயிரே கண்ணம்மா!

நல்லவுயிர் நீ யெனக்கு,நாடியடி நானுனக்கு
செல்வமடி நீ யெனக்கு,சேமநிதி நானுனக்கு
எல்லையற்ற பேரழகே!எங்கும் நிறை பொற்சுடரே!
முல்லைநிகர் புன்னகையாய்!மோதுமின்பமே!கண்ணம்மா!

தாரையடி நீ யெனக்கு,தண்மதியம் நானுனக்கு
வீரமடி நீ யெனக்கு,வெற்றியடி நானுனக்கு
தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம்
ஒருருவமாய்ச் சமைந்தாய்!உள்ளமுதமே!கண்ணம்மா!

## பாரத ஜனங்களின் தற்கால நிலைமை

### நொண்டிச் சிந்து

1.
நெஞ்சு பொறுக்கு திலையே-இந்த
    நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார்-இவர்
    அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்கள் என்பார்-இந்த
    மரத்தில் என்பார்அந்தக் குளத்தில் என்பார்
துஞ்சுவது முகட்டில் என்பார்-மிகத்
    துயர்ப்படு வார் எண்ணிப் பயப்படுவார். (நெஞ்சு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.

மந்திர வாதி என்பார்-சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்
யந்திர சூனியங் கள்-இன்னும்
எத்தனை ஆயிரம் இவர் துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே-ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசிய லை-இவர்
அஞ்சதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர் வார் (நெஞ்சு)

3.

சிப்பாயைக் கண்டு அஞ்சு வார்-ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப் பார்
துப்பாக்கி கொண்டு ஒருவன்-வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப் பார்
அப்பால் எவனோ செல்வான்-அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்துநிற் பார்
எப்போதும் கைகட்டு வார்-இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கிநடப் பார் (நெஞ்சு)

4.

நெஞ்சு பொறுக்கு திலையே-இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட் டால்,
கொஞ்சமோ பிரிவினை கள்?-ஒரு
கோடிஎன் றால் அது பெரிதா மோ?
ஐந்துதலைப் பாம்பென் பான்-அப்பன்
ஆறுதலை யென் றுமகன் சொல்லிவிட் டால்
நெஞ்சு பிரிந்திடு வார்-பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப் பார். (நெஞ்சு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.

சாத்திரங்கள் ஒன்றும் காணார்-பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன் றாயிருந்தா லும்-ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ் வார்
தோத்திரங்கள் சொல்லி அவர்தாம்-தமைச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடு வார்
ஆத்திரங்கொண் டேஇவன் சை வன்-இவன்
அரிபக்தன் என்றுபெருஞ் சண்டையிடு வார். (நெஞ்சு)

6.

நெஞ்சு பொறுக்கு திலையே-இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்கு திலையே
கஞ்சி குடிப்பதற் கிலார்-அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமி லார்.
பஞ்சமோ பஞ்சம் என்றே-நிதம்
பரிதவித் தேஉயிர் துடிதுடித் தே
துஞ்சி மடிக்கின் றாரே-இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலை யே (நெஞ்சு)

7.

எண்ணிலா நோயுடை யார்-இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையி லார்
கண்ணிலாக் குழந்தை கள்போல்-பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக்கொள் வார்
நண்ணிய பெருங்கலை கள்-பத்து
நாலாயிரங் கோடி நயந்துநின் ற
புண்ணிய நாட்டினி லே-இவர்
பொறியற்ற விலங்குகள் போலவாழ் வார் (நெஞ்சு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிப்புச் சுதேசிகள்

## பழித்தறிவுறுத்தல் – கிளிக் கண்ணிகள்

நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ!-கிளியே!
வாய்ச் சொல்லில் வீர ரடீ 1

கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டித்திற் கொள்ளா ரடீ!-கிளியே!
நாளில் மறப்பா ரடீ! 2

சொந்த அரசும் புவிச் சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகுமோ!-கிளியே
அலிகளுக் கின்ப முண்டோ? 3

கண்கள் இரண்டி ருந்தும் காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்ட மடி!-கிளியே!
பேசிப் பயனென் னடீ! 4

யந்திர சாலை யென்பர் எங்கள் துணிக ளென்பர்
மந்திரத் தாலே யெங்கும்-கிளியே!
மாங்கனி வீழ்வதுண் டோ? 5

உப்பென்றும் சீனி என்றும் உள் நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவா ரடீ!-கிளியே!
செய் தறியா ரடீ! 6

தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால்!-கிளியே
நம்புத லற்றா ரடீ! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயி ரைக்-கிளியே
பேணி யிரந்தா ரடீ! 8

தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்!-கிளியே!
அஞ்சிக் கிடந்தா ரடீ! 9

அச்சமும் பேடி மையும் அடிமைச் சிறும தியும்
உச்சத்திற் கொண்டா ரடீ!-கிளியே!
ஊமைச் சனங்க ளடீ! 10

ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக் கோர் கணமும்-கிளியே!
வாழத் தகுதி யுண்டோ? 11

மானம் கிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்-கிளியே!
இருக்க நிலைமை யுண்டோ? 12

சிந்தையிற் கள் விரும்பிச் சிவசிவ என்பது போல்,
வந்தே மாதர மென்பார்!-கிளியே!
மனதி லதனைக் கொள்ளார் 13

பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப்
பழமை இருந்த நிலை!-கிளியே!
பாமர ரேதறி வார்! 14

நாட்டில் அவ மதிப்பும் நாணின்றி இழி செல்வத்
தேட்டில் விரப்புங் கொண்டே!-கிளியே!
சிறுமை யடைவா ரடீ! 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தச் சகோ தரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்கா ரடீ-கிளியே!
செம்மை மறந்தா ரடீ! 16

பஞ்சத்தும் நோய்க ளிலும் பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தம் கண்ணாற் கண்டும்!-கிளியே!
சோம்பிக் கிடப்பா ரடீ! 17

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா!-கிளியே!
வந்தே மாதர மென்பார்! 18

## சுதந்திர தாகம்

**ராகம்–கமாஸ்** **தாளம்–ஆதி**

என்று தணியும்இந்தச் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னை கை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?
அன்றொரு பாரதம் ஆக்கவந் தோனே!
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?
மெய்யடி யோம் இன்னும் வாடுதல் நன்றோ? 1

பஞ்சமும் நோயும் நின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ
அஞ்சலென் றருள்செயுங் கடமை யில்லாயோ?
ஆரிய! நீயும் நின் அறம்மறந் தாயோ?
வெஞ்செயல் அரக்கரை வீட்டிடு வோனே?
வீர சிகாமணி!ஆரியர் கோனே! 2

## அச்சமில்லை

### பண்டாரப் பாட்டு

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சை கொண்ட பொருளெலாம் இழந்த விட்ட போதிலும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
நச்சை வாயி லேகொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்.
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்

கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்.
பெண் விடுதலை வேண்டும்.
பெரிய கடவுள் காக்க வேண்டும்
மண்பயனுற வேண்டும்,
வாகனமிங்கு தென்பட வேண்டும்.
உண்மை நின்றிட வேண்டும்.
ஓம் ஓம் ஓம் ஓம்.

## முரசு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!
நெற்றி யொற்றைக் கண்ணனோடே நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க என்று கொட்டு முரசே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு நல்லது சொல்வேன்-எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக் கெல்லாம் முதலாகும்-ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

வேத மறிந்தவன் பாப்பான்,-பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்,
நீதி நிலைதவ றாமல்-தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

பண்டங்கள் விற்பவன் செட்டி-பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி.
தொண்டரென் றோர்வகுப் பில்லை,-தொழில்
சோம்பலைப் போல்இழி வில்லை.

நாலு வகுப்பும்இங் கொன்றே-இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்,
வேலை தவறிச் சிதைந்தே-செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி.

ஒற்றைக் குடும்பந் தனிலே-பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே-மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

ஏவல்கள் செய்பவர் மக்கள்-இவ்
யாவரும் ஓர்குலம் அன்றோ!
மேவி அனைவரும் ஒன்றாய்-நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

சாதிப் பிரிவுக் சொல்லி-அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிப் பிரிவுகள் செய்வார்-அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்-தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக் குள்ளே சிலமூடர் நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

கண்கள் இரண்டில் ஒன்றைக்-குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்-வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்.

தெய்வம் பலபல சொல்லிப் -பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வதனைத்திலும் ஒன்றாய்-எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்.

தீயினைக் கும்பிடும் பார்ப்பார்,-நித்தம்
திகசை வணங்கும் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே-நின்று
கும்பிடும் யேசு மதத்தார்:

யாரும் பணிந்திடும் தெய்வம்-பொருள்
யாவினும் நின்றிடும் தெவ்வம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருக்குள்ளே தெய்வம் ஒன்று-இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

வெள்ளை நிறத்தொரு பூனை-எங்கள்
வீட்டில் வளருதுகண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை-அவை
பேருக் கொருநிற மாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி,-வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

எந்த நிறமிருந் தாலும்-அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்-இஃது
ஏற்ற மென்றும் சொல்லலாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமை யில்லை,
எண்ணங்கள செய்கைக ளெல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

நிகரென்று கொட்டு முரசே!-இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே!-பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

அன்பென்று கொட்டு முரசே-அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு
துன்பங்கள் யாவும் போகும்-வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பென்று கொட்டு முரசே!-மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.

உடன்பிறந் தாக்ளைப் போல-இவ்
வுலகில் மனிதரெல் லாரும்
இடம்பெரி துண்டுவை யத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

மரத்தினக நட்டவன் தண்ணீர்-நன்கு
வார்த்ததை ஓங்கிடச் செய்வான்
சிரத்தை யுடையது தெய்வம்,-இங்கு
சேர்ந்த உணவெலை யில்லை.

வயிற்றுக்குச் சொறுண்டு கண்டீர்!-இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்!-பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

உடன்பிறந் தவர்களைப் போலே-இவ்
வுலகினில் மனிதரெல் லோரும்
திடங்கொண் டவர்மெலிந் தோரை-இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

வலிமை யுடையது தெய்வம்.-நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்
மெலிவுகண் டாலும் குழந்தை-தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ?

தம்பிசற் றேமெலி வானால்-அண்ணன்
தானடி மைகொள்ள லாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி-மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ?

அன்பென்று கொட்டு முரசே!-அதில்
யார்க்கும் விடுதலை உண்டு
பின்பு மனிதர்க ளெல்லாம் கல்வி
பெற்றுப் பதம்பெற்று வாழ்வார்.

அறிவை வளர்த்திட வேண்டும்-மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியாரை மேம்படச் செய்தால்-பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.

பாருக்குள் ளேசமத் தன்மை-தொடர்
பற்றுஞ் சதோதரத் தன்மை,
யாருக்கும் தீமைசெய் யாது-புவி
யெங்கும் விடுதலை செய்யும்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

ஒன்றென்று கொட்டு முரசே!-அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!-இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யோ?மெய்யோ?

## உலகத்தை நோக்கி வினவுதல்

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ?-பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே,நீங்க ளெல்லாம்
அற்பமாயைகளோ? - உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ? - வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ? - இந்த ஞாலமும் பொய்தானோ?

கால மென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ? - அங்குக் குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்க ளெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ? - இதைச் சொல்லொடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம் காண்ப
மன்றோ?
வீண்படு பொய்யிலே - நித்தம் விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதில்லை
காண்பது சக்தியாம் - இந்தக் காட்சி நித்தியமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா!-நீ
ஓய்ந்திருக்க லாகாகது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!-ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

சின்னஞ் சிறுகுருவி போலே-நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வன்னப் பறவைகளைக் கண்டு-நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா!

கொத்தித் திரியுமந்தக் கோழி-அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா!

பாலைப் பொழிந்துதரும் பாப்பா!-அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்-அது
மனிதர்க்கு தோழனடி பாப்பா!

வண்டி இழுக்கும்நல்ல குதிரை,-நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை,ஆடு,-இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்சொல்லக் கூடாது பாப்பா!-என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா!-ஒருன
தீங்குவர மாட்டாது பாப்பா!

பாதகஞ் செய்பவரைக் கணடால்-நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!-அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

துன்பம் நெருங்கி வந்த போதும்-நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அ!ன்பு மிகுந்ததெய்வ முண்டு-துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா!-தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி யழுங்குழந்தை நொண்டி,-நீ
திடங்கொண்டு போராடு பாப்பா!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!-நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே!-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்-அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் இமயமலை பாப்பா!-தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய்-இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்ப!

வேத முடையதிந்த நாடு,-நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு
சேதமில் லாதஹிந்து ஸ்தானம்-இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா!

சாதிகள் இல்லையடி பாப்பா!-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி,கல்வி-அன்பு
நிறை உடையவர்கள் மேலோர்.

உயிர்க ளிடத்தில்அன்பு வேணும்-தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடையநெஞ்சு வேணும்-இது
வாழும் முறைமையடி பாப்பா!

## மழை

திக்குக்கள் எட்டும் சிதறி-தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து-வெள்ளம்
பாயுது பாயுது பாயுது-தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்-அண்டம்
சாயுது சாயுது சாயுது-பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று-தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டி யடிக்குது மின்னல்,-கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம்-கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா-என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய-மழை
எங்ஙனம் வந்ததடா,தம்பி வீரா!

அண்டம் குலுங்குது,தம்பி!-தலை
ஆயிரந் தூக்கிய சேடனும் பேய்போல்
மிண்டிக் குதித்திடு கின்றான்-திசை
வெற்புக் குதிக்குதுவானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார்-என்ன
தெய்விகக் காட்சியை கண்முன்பு கண்டோம்!
கண்டோம் கண்டோம் கண்டோம்-இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம்!

## 18. அக்கினிக் குஞ்சு

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்-அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு-தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்ரிகிட தித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் ஏற்றுக்கொள்ள வேண்டியவை

பிறக்கும்போது தாயை அழவைக்கிறோம்.
இறக்கும்போது எல்லோரையும் அழவைக்கிறோம்.
வாழும்போதாவது எல்லோரிடமும் சிரிக்கப் பழகுவோம்.

நீ தனிமையில் இருக்கும்போது உனக்கு என்ன என்ன தோன்றுகிறதோ
அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

- விவேகானந்தர்

வெற்றி என்பது நிரந்தரமல்ல;
தோல்வி என்பது இறுதியானதுமல்ல!

ஒரு நொடி துணிந்தால் இறந்துவிடலாம்;
ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்து விடலாம்.

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன.
ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.

- பில் கேட்ஸ்

சிக்கல்கள் என்பவை ஓடும் ரெயிலிலிருந்து பார்க்கும் மரங்களைப் போன்றவை. அருகில் போனால் அவை பெரிதாகத் தெரியும். அவற்றைக் கடந்து சென்றால் அவை சிறிதாகிவிடும். இதுதான் வாழ்க்கை

விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.
தட்டிக் கொடுங்கள்; தவறுகள் குறையும்.
மனம் விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும்.

நட்பு எனும் கலையானது ஒரு நல்ல இசைக் கருவியை வாசிப்பது போன்றது. முதலில் விதிகளின்படி இந்தக் கருவியை வாசிக்கத் தொடங்க வேண்டும். பிறகு விதிகளை மறந்துவிட்டு இதயத்திலிருந்து வாசிக்க வேண்டும்.

கடவுள்
நகைச்சுவையுடன் எழுதக்கூடிய ஒரு சிறந்த எழுத்தாளர். ஆனால் அவர், நகைச்சுவையுடன் நடிக்கத் தெரியாத மோசமான நடிகர்கள் பலரைக் கொண்டு தன் நாடகத்தை நடத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரின் சுவாசம் மூச்சு; கண்களின் சுவாசம் கனவு.
இதயத்தின் சுவாசம் துடிப்பு, நாக்கின் சுவாசம் பேச்சு.
என் நட்பின் சுவாசம் நீ.

வெற்றி என்பது நிரந்தரமல்ல.
தோல்வி என்பது இறுதியானதுமல்ல. அதனால்
வெற்றிக்குப் பிறகு தொடர்ந்து உழைப்பதை நிறுத்த வேண்டாம்.
தோல்விக்குப் பிறகு தொடர்ந்து முயல்வதை நிறுத்தவேண்டாம்.

கண்களைத் திறந்து பார் அனைவரும் தெரிவார்கள்.
கண்களை மூடிப்பார் எனக்குப் பிடித்தவர்கள் மட்டும் தெரிவார்கள்.

தோல்வியின் அடையாளம் தயக்கம், வெற்றியின் அடையாளம் துணிச்சல்
துணிந்தவர் தோற்றதில்லை, தயங்கியவர் வென்றதில்லை.

வெற்றியை விரும்பும் நமக்குத் தோல்வியைத் தாங்கும் மனம் இல்லை.
தோல்வியைத் தாங்கும் மனம் இருந்தால் அதுவும் ஒரு வெற்றிதான்.

உங்களின் தோல்வி எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா?
பிரச்சினைகள் வரும்போது அல்ல, பிரச்சினைகளைக் கண்டு நீங்கள்
பயந்து விலகும்போது.

- பாரதியார்

எவையெல்லாம் அழகாக இருக்கின்றனவோ
எவையெல்லாம் அர்த்தத்துடன் இருக்கின்றனவோ
எவையெல்லாம் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருமோ
அவை அனைத்தும் உங்களுக்குக் கிடைக்கட்டும்!
இன்றும் நாளையும் என்றும்.

மின்தடை ஏற்படும்போது தான் நமக்கு மெழுகுவர்த்தி ஞாபகம் வருகிறது. அப்படித்தான் பிரச்சினைகளின்போது ஒரு நண்பர், தீர்வு என்னும் விளக்கேந்தி வருகிறார். நான் உனக்கொரு மெழுகுவர்த்தியாக இருப்பேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால் உங்கள் விழிகளைக் கண்ணீரால் நிரப்பாதீர்கள். உங்கள் கண்ணீர் உங்கள் முன் உள்ள இன்னொரு வாய்ப்பை மறைத்துவிடும். அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்.

நீ மற்றவருக்கு வழிகாட்டி ஆவதற்காகப் பிறந்திருக்கிறாய்.
ஏன் மற்றவர்களிடம் உன் வழிகாட்டியைத் தேடிக் கொண்டிருக்கிறாய்?
இந்த உலகம் உன் வெற்றிக் கதையைப் படிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது.

வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம்.
ஆனால் அவைதான் வாழ்வை இனிமையாக மாற்றும்.

நாம் அனைவரும் ஒரே அளவு திறமை பெற்றவர்கள் இல்லை. ஆனால் நம் திறமையை வளர்த்துக்கொள்ள ஒரே அளவு வாய்ப்புக்களைப் பெற்றிருக்கிறோம்.


- அப்துல் கலாம்.

ஓர் உண்மை
நீ மகிழ்ச்சியாக இருக்கும்போது நீ யாரை விரும்புகிறாயோ
அவரை நினைத்துக்கொள்வாய்.
நீ துயரத்தில் இருக்கும்போது உன்னை யார் விரும்புகிறாரோ
அவரை நினைத்துக் கொள்வாய்!

உங்கள் இதயத்தில் மகிழ்ச்சி
உங்கள் ஆன்மாவில் புத்துணர்வு
உங்கள் வாழ்வில் வெற்றி
உங்கள் முகத்தில் புன்னகை
உங்கள் இல்லத்தில் அன்பின் நறுமணம்
இவை அனைத்தும் உங்களுக்கு என்றும் கிடைக்கட்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* – அமரர்களைக் குறிக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் வாழ்வு வளமிக்கதாக ஒளிர சந்தன மரமாய்
மெழுகுவர்த்தியாய் இரவு பகலாய் உருகி
எம்மை வாழவைத்த எமது குடும்பத்தலைவி

**சின்னத்துரை பூமணி**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு நேரில் வந்து
ஆறுதல் கூறி தேறுதல் தந்த அன்புள்ளங்களிற்கும்
உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம்
தொடர்பு கொண்டு துயரில் இணைந்த அனைவர்க்கும்
மலர்மாலை, மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள்
சமர்ப்பித்த அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில்
பங்குகொண்டவர்கள், சடங்கு, அந்தியேட்டிக் கிரியைகள் என
இற்றைவரை பல வழிகளிலும் உதவிய
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும்
சகல கிரியைகளையும் முறையே நிறைவேற்றிய
அந்தண சிவாச்சாரியார்கள் அனைவர்க்கும்
இம்மலரை குறுகிய காலத்தில் பிழையற, அழகுற அச்சிட்டு
உதவிய அன்ரா நிறுவனத்தினருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ.
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ.
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்.
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ.
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ.
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்.
அது வேறொருவருடையதாகும்"
இதுவே உலக நியதியும்.
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINT MASTER, KULAPIDDY. 021 205 3322